# பெல்ஸ்டார் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

## நேர்மையான நடைமுறைகள் விதித்தொகுப்பு

V2@ இயக்குநர் குழுவால் ஜனவரி 30, 2018 அன்று அங்கீகரிக்கப்பட்டது

பெல்ஸ்டார் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் (“நிறுவனம்”/ “BIFPL” என இனிமேல் குறிப்பிடப்படும்) சிறு தொழில் உரிமையாளர்களுக்கு நிதி சேர்க்கைக்காக சிறு நிதி வழங்கும் சேவைகளை மேம்பட்ட முறையில் செய்து வருகிறது. இந்த நிறுவனம் இந்தியன் ரிசர்வ் வங்கியுடன் (RBI) பதிவு செய்யப்பட்ட ஒரு NBFC- MFI ஆகும். BIFPL-ன் இந்த நேர்மையான நடைமுறை விதித்தொகுப்புகள் (FPC), RBI வழிகாட்டுதல்களின் படி வழங்கப்பட்டுள்ளன. 2016, செப்டம்பர் 01 தேதியிட்ட மாஸ்டர் வழிகாட்டுதல்கள் DNBR. PD. 008/03.10.119/2016-17-ன் படி இந்த நிறுவனத்தின் FPC மறுஆய்வு செய்யப்பட்டு அவ்வப்போது மாற்றங்கள் செய்யப்படுகிறது. இது 2018,ஜனவரி 30ந்தேதி இயக்குனர்கள் குழுவால் (Board of Directors) அங்கீகரிக்கப்பட்டது.

## A. கடன்களுக்கான விண்ணப்பங்களும் மற்றும் அவற்றின் செயலாக்கங்களும்

- கடன் பெறுபவருடனான அனைத்து தகவல் தொடர்புகளும் தாய் மொழியில் அல்லது கடன் பெறுபவர் புரிந்துகொள்ளும் மொழியில் இருக்கவேண்டும்
- கடன் பெறுபவர் மற்ற NBFC –க்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் உரிய முறையில் ஒப்பிட்டு பார்த்து ,தகவலளிக்கப்பட்ட முடிவு எடுக்கும் வகையில் கடன் பெறுபவரை பாதிக்கக்கூடிய தேவையான தகவல்கள் விண்ணப்ப படிவத்தில் இடம் பெற்றிருக்கவேண்டும். விண்ணப்ப படிவத்துடன் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் பற்றி விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடவேண்டும்.
- BIFPL, பெறப்பட்ட அனைத்து கடன் விண்ணப்பங்களுக்கும் ஏற்றுக் கொண்டதற்கான ரசீது வழங்கும். கடன் விண்ணப்பங்கள் மீதான முடிவு அறிவிக்கப்படும் காலக்கெடுவும் அதில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

## B. கடன் மதிப்பீடு மற்றும் விதிமுறைகள் / நிபந்தனைகள்

ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன் தொகை மற்றும் அதனுடன் வருடாந்திர வட்டி விகிதம், வட்டி கணக்கிடப்படும் முறை உள்ளிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை BIFPL கடன் பெறுபவருக்கு எழுத்து மூலம் அவர் புரிந்துகொள்ளக்கூடிய தாய் மொழியில் கடன் ஒப்புதல் கடிதம் அல்லது வேறு முறைகளில் தெரிவிக்கவேண்டும். கடன் பெறுபவரின் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஒப்புதலை பதிவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

கடன் வழங்கும்போது தாய் மொழியிலான கடன் ஒப்பந்தத்தின் ஒரு நகலை, கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து இணைப்புகளுடனும் BIFPL கடன் பெறுபவருக்கு கொடுக்கவேண்டும்.

## C. கடன்களை வழங்குவது உள்ளிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள மாற்றங்கள்

- கடன் வழங்கும் அட்டவணை, வட்டி விகிதங்கள், சேவை கட்டணங்கள், கடன் கால முடிவுக்கு முன்னரே முழு கடன் தொகையையும் திரும்ப செலுத்ததுக்கான கட்டணங்கள் போன்றவை உள்ளிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அது பற்றி கடன் பெறுபவர் புரிந்துகொள்ளும் தாய் மொழியில் BIFPL கடன் பெறுபவருக்கு முன் அறிவிப்பு செய்யவேண்டும். வட்டி விகிதங்கள் மற்றும் கட்டணங்களின் மாற்றங்கள் எதிர்காலங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதை BIFPL உறுதி செய்துகொள்ளவேண்டும். இது பற்றிய பொருத்தமான நிபந்தனையை கடன் உடன்பாட்டில் சேர்க்க வேண்டும்;
- உடன்படிக்கையின் கீழ் திரும்பப்பெறுதல் / பணம் செலுத்தலை துரிதப்படுத்துதல் அல்லது செயல்பாடு ஆகியவற்றிற்கான முடிவு கடன் உடன்படிக்கைக்கு ஒத்ததாகவே இருக்கும்;
- அனைத்து கடன் பாக்கிகளையும் செலுத்திய பிறகு அல்லது நிலுவையில் உள்ள கடன் பாக்கி தொகையை வசூலித்த பிறகு, ஏதேனும் சட்டபூர்வ உரிமை அல்லது BIFPL–யின் வேறு ஏதேனும் கோரலுக்கான பற்றுரிமைக்குட்பட்டு அனைத்து கடனுக்கான பிணையங்களையும் BIFPL விடுவித்துவிடும். இத்தகைய உரிமையை மீட்டுக்கொள்ளும் பொருட்டு, மீதமுள்ள கோரல்கள் பற்றிய விவரங்கள் மற்றும் அத்தகைய கோரல்கள் முடிக்கப்படும் / பணம் கட்டப்படும் வரை BIFPL பிணையங்களை விடுவிக்காமல் வைத்துக்கொள்ளும் நிலைகள் பற்றி கடன் பெறுபவருக்கு முன் அறிவிப்பு செய்யவேண்டும்.

## D. பொதுவானவை

- கடன் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளில் அளிக்கப்பட்ட நோக்கங்களைத் தவிர கடன் பெறுபவரின் எந்த விவகாரங்களிலும் BIFPL குறுக்கிடாது ( கடன் பெறுபவரால் முன்னரே வெளியிடப்படாத புதிய தகவல்கள், BIFPLஇன் கவனத்திற்கு வந்தாலொழிய);
- கடன் பெறும் கணக்கை மாற்றும்படி கடன் பெறுபவரின் கோரிக்கையை பெறும் பட்சத்தில், ஒப்புதல் அல்லது ஒப்புதல் இல்லாமை அதாவது, BIFPLஇன் மறுப்பு, கோரிக்கையை பெறும் தேதியிலிருந்து 21 நாட்களுக்குள் தெரிவிக்கப்படும். அத்தகைய மாற்றுதல் சட்டத்துடன் ஒத்திசைவாக வெளிப்படையான ஒப்பந்த விதிமுறைகளுக்கு ஏற்ப இருக்கும்;

- கடன்களை வசூலிக்கும் விஷயத்தில், BIFPL தகாத துன்புறுத்துதலை, அதாவது கடன் பெறுபவர்களை முறையற்ற நேரத்தில் தொடர்ந்து தொந்தரவு செய்தல், கடன்களை வசூலிப்பதற்காக தாக்குதல்,அச்சுறுத்தல் போன்ற வன்முறைகளை பயன்படுத்துதல் ஆகியவற்றை செய்யாது. பணியாளர்கள் வாடிக்கையாளர்களுடன் தகுந்த முறையில் செயல்பட போதுமான பயிற்சியளிக்கப்பட்டிருப்பதை BIFPL உறுதிபடுத்தும்.

## E. இயக்குநர்கள் குழுவின் பொறுப்பு

BIFPLஇன் இயக்குநர்கள் குழு இந்த விஷயத்தில் எழும் சர்ச்சைகளைத் தீர்க்க நிறுவனத்திற்குள்ளேயே முறையான குறையுள்ளோர் குறை தீர்த்தல் இயங்கமைப்பை வகுத்துள்ளனர். நிறுவனத்தின் பணித்துறை அதிகாரிகளின் முடிவுகளில் இருந்து எழும் அனைத்து சர்ச்சைகளும் குறைந்தபட்சம் அடுத்த உயர் மட்டத்தில் கேட்கப்படுவதையும் அகற்றப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்காக குறையுள்ளோர் குறை தீர்த்தல் இயங்கமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இயக்குநர்கள் குழு நிர்வாகத்தின் பல்வேறு மட்டங்களில் நேர்மையான நடைமுறை விதித்தொகுப்புகளின் இணக்கம் மற்றும் குறையுள்ளோர் குறை தீர்த்தல் இயங்கமைப்பின் செயல்பாடு ஆகியவற்றின் குறிப்பிட்ட கால இடைவெளி ஆய்வுகளுக்கு வழி வகுக்கும். இத்தகைய மறுஆய்வுகளின் ஒருங்கிணைந்த அறிக்கை குழுவினால் குறிப்பிடப்பட்ட வழக்கமான இடைவெளிகளில் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

## F. குறையுள்ளோர் **குறை தீர்த்தல் அலுவலகம்**

செயல்பாட்டு மட்டத்தில், BIFPL வாடிக்கையாளர்களின் நன்மைக்காக நமது கிளைகள் / வணிக பரிவர்த்தனை செய்யப்படும் இடங்களில் பின்வரும் தகவல்களை தெள்ளத்தெளிய காட்சிப்படுத்தும்:

- குறையுள்ளோர் நிறுவனத்திற்கு எதிரான புகார்களின் தீர்மானத்திற்கு பொதுமக்கள் அணுகக்கூடிய குறை தீர்த்தல் அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள் (தொலைபேசி / மொபைல் எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியும்)
- ஒரு மாத காலத்திற்குள் புகார் / சர்ச்சை குறை தீர்த்தல் செய்யப்படாவிட்டால், வாடிக்கையாளர் கீழே கொடுக்கப்பட்டுள்ள RBIஇன் DNBSஇன் பிராந்திய அலுவலகத்தின் பொறுப்பு அதிகாரியிடம் மேல் முறையீடு செய்யலாம், அவருடைய அதிகார எல்லையின் கீழ்தான் BIFPLஇன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் உள்ளது:

**பொது மேலாளர்**
**வங்கி பரிவர்த்தனை அல்லாத மேற்பார்வை துறை,**
**இந்திய ரிசர்வ் வங்கி, ஃபோர்ட் க்ளாசிஸ்**

**ராஜாஜி சாலை, சென்னை 600001**

**தொலைபேசி எண்: 044-25393406**

**தொலைநகல் எண் .: 044-25393797**

**G. நேர்மையான நடைமுறை விதித்தொகுப்புகளின் மொழி மற்றும் தகவல் தொடர்புக்கான முறை**

நேர்மையான நடைமுறை விதித்தொகுப்புகள் கடன் பெறுபவர் புரிந்துகொள்ளும் தாய் மொழியில் இருக்கும்;

**H. அதிகப்படியான விதிக்கப்படும் வட்டியின் ஒழுங்குமுறை**

- BIFPLஇன் குழு, நிதிகளின் செலவு, இலாப அளவு மற்றும் இடர் நிலை தவணை போன்ற தொடர்புடைய காரணிகளை கருத்தில் கொண்டு கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதத்தை நிர்ணயிக்கும் வட்டி விகித மாதிரியை பின்பற்ற வேண்டும். வட்டி விகிதம் , இடர்களின் தரப்படுத்துதல் மற்றும் பல வகை கடன் வாங்குபவர்களுக்கான வெவ்வேறு வட்டி விகிதங்கள் ஆகியவற்றிற்கான அணுகுமுறை மற்றும் உள்ளார்ந்த காரணம் ஆகியவை விண்ணப்பப்படிவத்தில் கடன் பெறுபவர் அல்லது வாடிக்கையாளருக்கு வெளியிடப்பட வேண்டும் மற்றும் ஒப்புதல் கடிதத்தில் வெளிப்படையாக தெரிவிக்கப்பட வேண்டும்.
- வட்டி விகிதங்கள் மற்றும் இடர்களின் தரப்படுத்துதல் அணுகுமுறை நிறுவனத்தின் வலைதளத்தில் (www. Belstar.in) கிடைக்கப்பெற வேண்டும், மேலும் வட்டி விகிதத்தில் மாற்றம் ஏற்பட்டால், புதுப்பிக்கப்பட வேண்டும்.
- கணக்கிற்கு விதிக்கப்படும் மிகச் சரியான விகிதத்தை கடன் பெறுபவர் அறியும் வகையில் வட்டி விகிதம் வருடாந்திர விகிதமாக இருக்க வேண்டும்.

**I. NBFC-MFIs**:

இந்த வழிகாட்டுதல்களின் VI ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளபடி FPC பற்றிய பொதுவான கொள்கைகளுடன் கூடுதலாக, பின்வரும் குறிப்பிட்ட நேர்மையான விதித்தொகுப்புகளை BIFPL பின்பற்ற வேண்டும்:

**(I) பொதுவானவை:**

a) BIFPL அதன் அலுவலகம் மற்றும் கிளை வளாகத்தில் FPC-யை தாய் மொழியில் காட்சிக்கு வைக்கும்;

b) BIFPL அதன் கடன் பெறுபவர்களிடம் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையான விதித்தொகுப்புகளுக்கு கடமைப்பட்டுள்ளது. BIFPL இதை பற்றி தாய் மொழியில் ஒரு அறிக்கையை வெளியிடுவதோடு, அதை அனைத்து கிளை அலுவலக வளாகத்திலும் காட்சிக்கு வைத்து, அனைத்து கடன் பெறுபவர் கடன் அட்டைகளிலும் அச்சிடவும் செய்கிறது;

c) கடன் பெறுபவர்களுக்கு ஏற்கனவே உள்ள கடன்களைப் பொறுத்தவரையில் BIFPLஇன் கள பணியாளர்கள் தேவையான விசாரணைகளை செய்ய பயிற்றுவிக்கப்படுகிறார்கள்;

d) கடன் பெறுபவர்களுக்கு BIFPL அளிக்கும் அனைத்து பயிற்சிகளும் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்படும். இத்தகைய பயிற்சியை வழங்குவதற்கும் மற்றும் கடன் / பிற பொருட்கள் தொடர்பான செயல்முறை மற்றும் அமைப்புமுறைகளை கடன் பெறுபவர்கள் முழுமையாக அறிந்து கொள்ளச் செய்வதற்கும் அனைத்து கள பணியாளர்களும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்;

e) BIFPL விதிக்கும் நடப்பில் உள்ள வட்டி விகிதத்தை, அதன் அனைத்து அலுவலகங்களிலும் தாய்மொழியில் காட்சிப்படுத்துகிறது மற்றும் பிரசுரங்களிலும் தாய்மொழியில் வெளியிடுகிறது. BIFPLஇன் குறையுள்ளோர் குறை தீர்த்தல் அமைப்பு அதன் அனைத்து அலுவலகங்களிலும் தெள்ளத்தெளிய காட்சிப்படுத்தப்படும்;

f) பணியாளர்களின் முறையற்ற நடத்தையை தடுத்தல் மற்றும் கடன் பெறுபவரின் குறையுள்ளோர் குறை தீர்த்தலை உரிய நேரத்தில் செய்வது ஆகியவற்றிற்கு BIFPL பொறுப்புடையதாகும். கடன் பெறுபவருக்கு வழங்கப்படும் கடன் ஒப்பந்தத்திலும் மேற்கூறிய பிரகடனம் வழங்கப்பட்டுள்ளது;

g) ரிசர்வ் வங்கியின் KYC வழிமுறைகளுடனான இணக்கத்தை BIFPL உறுதி செய்கிறது. கடன் பெறுபவர்களின் திருப்பிச் செலுத்தும் திறனை உறுதி செய்வதற்காக கடன் பெறுபவர் ஒவ்வொருவரும் உரிய முயற்சி சிரத்தையை மேற்கொள்ள வேண்டும்;

h) கடன்களுக்கு ஒப்புதல் அளிப்பது மற்றும் கடன்களை வழங்குவது ஆகிய அனைத்தும் மத்திய அமைவிடத்தில் மட்டுமே செய்யப்படும், மற்றும் இந்த செயல்பாட்டில் ஒருவருக்கு மேற்பட்ட தனிநபர்கள் ஈடுபடுவார்கள். கூடுதலாக, பணம் வழங்கும் செயல்பாடு கூர்ந்து மேற்பார்வையிடப்படும்;

i) கடனுக்கு விண்ணப்பம் செய்வதற்கான நடைமுறை சிக்கலானது அல்ல மற்றும், முன்-நிர்ணயிக்கப்பட்டட நேர கட்டமைப்பின் படி கடன் வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை BIFPL உறுதி செய்யும்.

### (II) கடன் ஒப்பந்தம் / கடன் அட்டையில் உள்ள வெளிப்படுத்தல்கள்

a) BIFPL கடன் உடன்படிக்கைக்கு குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தர நிலையான படிவத்தை கொண்டுள்ளது. கடன் உடன்படிக்கை தாய் மொழியில் இருக்கும்;

b) கடன் ஒப்பந்தத்தில் பின்வருபவை வெளிப்படுத்தப்படுகின்றன:

- கடனின் அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும்.
- கடனின் விலையிடல் மூன்று கூறுகளை மட்டுமே உள்ளடக்கியது; வட்டி கட்டணம், செயலாக்கக் கட்டணம் மற்றும் காப்பீட்டு பிரீமியம் (அதற்கான நிர்வாகச் கட்டணங்களை உள்ளடக்கியது)
- தாமதமாக செலுத்தும் பணத்திற்கு எந்த அபராதமும் இல்லை.
- எந்த பாதுகாப்பு டெபாசிட்டும் / இலாப அளவும் கடன் பெறுபவரிடமிருந்து வசூலிக்கப்படவில்லை
- கடன் பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்ட SHG / JLG ஆகியவற்றில் உறுப்பினராக இருக்க முடியாது
- கடன் வழங்கல் மற்றும் முதல் தவணையின் திருப்பி செலுத்தும் தேதி ஆகியவற்றுக்கு இடையிலான கடன் தவணையுரிமை
- கடன் பெறுபவரின் தனியுரிமை மதிக்கப்படும் என்பதற்கான உறுதிப்பாடு.

c) வங்கி அல்லாத வங்கி நிதிசார் நிறுவனம் - மைக்ரோ நிதி நிறுவனங்கள் (ரிசர்வ் வங்கி) வழிகாட்டுதல்கள், 2011 இல் குறிப்பிட்டுள்ளபடி பின்வரும் விவரங்களை கடன் அட்டை பிரதிபலிக்கிறது.

- வசூலிக்கப்படும் நடப்பு வட்டி விகிதம்;
- கடனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து பிற விதிகளும் நிபந்தனைகளும்;
- கடன் பெறுபவர் மற்றும் பெறப்பட்ட தவணைகள் மற்றும் இறுதி வெளியீடு உட்பட அனைத்து திருப்பிச் செலுத்துதல்களுக்கான BIFPLஇன் ஒப்புகைகள் ஆகியவற்றை போதுமானதாக அடையாளம் காணும் தகவல்;
- BIFPLஆல் அமைக்கப்படும் குறையுள்ளோர் குறை தீர்த்தல் முறை மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரியின் பெயர் மற்றும் தொடர்பு எண் ஆகியவற்றை கடன் அட்டை முதன்மையாக குறிப்பிடும்;
- கடன் அல்லாத பொருட்கள் கடன் பெறுபவர்களின் முழு ஒப்புதலுடன் வழங்கப்படும் மற்றும் கட்டண கட்டமைப்பு கடன் அட்டையிலேயே குறிப்பிடப்படும்;
- கடன் அட்டையில் உள்ள அனைத்து உள்ளீடுகளும் தாய்மொழியில் இருக்கும்;

## (III) நிர்ப்பந்தப்படுத்தாத வசூலிப்பு முறைகள்

- வசூலிப்பு பொதுவாக ஒரு நியமிக்கப்பட்ட மைய இடத்தில் மட்டுமே செய்யப்படும். 2 அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ச்சியான சந்தர்ப்பங்களில் மத்திய நியமிக்கப்பட்ட இடத்தில் கடன் பெறுபவர் வரத் தவறினால் மட்டுமே கடன் பெறுபவரின் வீட்டிலோ அல்லது பணியிடத்திலோ வசூலிப்பு செய்ய களப் பணியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.
- BIFPL, களப் பணியாளர்களின் நடத்தை விதித் தொகுப்பு மற்றும் அவர்களுடைய ஆட்சேர்ப்பு, பயிற்சியளித்தல் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றிற்காக குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கொள்கையை கொண்டுள்ளது. விதித் தொகுப்பு பணியாளர்களுக்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகளை வகுப்பதுடன், வாடிக்கையாளர்களுடனான செயல்பாட்டிற்கு அடையாளம் காணப்பட்ட பயிற்சி கருவிகளையும் கொண்டிருக்கும். எந்த தவறான அல்லது நிர்பந்தப்படுத்தும் கடன் சேகரிப்பு / வசூலிப்பு நடைமுறைகளையும் பின்பற்றாமல் கடன் பெறுபவர்களிடம் முறையான நடத்தையை கற்பிக்கும் திட்டங்களை களப் பணியாளர்களுக்கான பயிற்சியளித்தல் உள்ளடக்கும். பணியாளர்களுக்கான இழப்பீட்டு வழிமுறைகள், திரட்டப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் வசூலிப்பு விகிதம் ஆகியவற்றைக் காட்டிலும் சேவை மற்றும் கடன் பெறுபவர்களின் மனநிறைவு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும். நடத்தை விதித் தொகுப்புடனான களப் பணியாளர்களின் இணக்கமின்மையின் நிகழ்வில் அபராதங்கள் விதிக்கப்படும். BIFPL கூர் உணர்வு பகுதிகளில் வசூலிப்பு செய்வதற்கு பணியாளர்களை மட்டுமே பயன்படுத்தும்.

## (IV) உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு

FPC-உடனான இணக்கத்தின் பொறுப்பு நிறுவனத்தின் உள்ளக தணிக்கை தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. FPCஇன் இணக்கத்தை சரிபார்க்கும் நடவடிக்கைகளின் அனைத்து அம்சங்களிலும் காலமுறை தணிக்கை செய்யும் உள்ளக தணிக்கை துறையை BIFPL கொண்டுள்ளது.